**அனுப்புநர்**

**வரலாறு, கணிதம், பொருளியல், வணிகவியல்** மற்றும் தாவரவியல் **ஆகிய பாடத்தில் தமிழ் வழி இடஒதுக்கீட்டின் அடிப்படையில் இறுதிப் பட்டியலில் தேர்வுப் பெற்று கலந்தாய்வு பட்டியலில் நீக்கம் செய்யப்பட்ட நபர்கள்**

**பெறுநர்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**,

**தலைமைச் செயலகம்**,

**சென்னை.**

**மதிப்பிற்குரிய ஐயா,**

<u>பொருள்:</u> **கடந்த 2021-22 முதுகலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு தெரிவுப் பட்டியலில் தமிழ் வழி இட ஒதுக்கீட்டில் 1:1 விகிதாச்சார அடிப்படையில் தகுதி பெற்று இருந்தும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் புறக்கணிக்கப்பட்டது சம்பந்தமாக.**

**குறிப்பு:**

**1.**முதுநிலை பட்டதாரி ஆசிரியர் தேர்வு அறிவிக்கை **நாள்: 01/2021.**

**2.** கணிணி வழி தேர்வு நடைபெற்ற நாள் **16.02.2022 முதல் 17.02.2022 வரை**.

**3.** தேர்வு முடிவு வெளியிடப்பட்ட நாள்: **4.7.2022.**

**4.** 1:2 என்ற விகிதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெற்ற நாள்: **27.8.2022.**

**5.** 1:1 என்ற விகிதத்தில் தெரிவுப்பட்டியல் வெளியிடப்பட்ட நாள் **16.9.2022.**

**6.** கலந்தாய்விற்க்காக விடுப்பட்ட தெரிவிப் பட்டியல்:**13.10.2022.**

நாங்கள் PG TRB 2021 தேர்வில் **தமிழ் வழி** இட ஒதுக்கீட்டில் **13.9.2022** அன்று வெளியிடப்பட்ட தெரிவுப்பட்டியலில் இடம்பெற்று இருந்தோம். ஆனால் **13.10.2022 அன்று கலந்தாய்விற்காக அழைக்கப்பட்ட பட்டியலில் எந்த முன் அறிவுப்பு இன்றி எங்களுடைய பெயரை TRB நீக்கி உள்ளது**. இதற்கான காரணத்தை கேட்டு TRB அணுகிய போது **Key Challenge** வழக்கு கொடுத்தவர்களுக்காக எங்கள் பெயர்களை நீக்கி இருப்பதாக தெரிவித்தார்கள். ஆனால் அவர்கள் அனைவருமே **ஆங்கில வழியில்** பயின்றவர்கள். **ஆங்கில வழியில் படித்தவர்களுக்காக தமிழ் வழியில் படித்தவர்களை நீக்குவது எந்த விதத்தில் நியாயம்.**

தமிழநாடு அரசு 16.8.2021 அன்று வெளியிடப்பட்ட **அரசாணை (நிலை) எண்:82-ன்** படி தமிழ் வழியில் படித்த எங்களுக்கு முன்னுரிமையை வழங்கபடாமல் TRB எங்களை கலந்தாய்வு பட்டியலில் இருந்து நீக்கி உள்ளன.

**தமிழ்நாடு அரசால் 2010-ம் ஆண்டு(அரசானை (நிலை)எண்:145)கொண்டு வரப்பட்ட தமிழ் வழியில் படித்தவர்களுக்கு அரசு பணிகளில் இருபது விழுக்காடு (20%) இட ஒதுக்கீட்டின் கீழ் முன்னுரிமையை பின்பற்றாமல்** ஆசிரியர் தேர்வு வாரியம் எங்களை புறக்கணித்தது. இது சம்பந்தமாக பலமுறை TRB தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டபோது அவர்கள் TRB-னுடைய இணையதளத்தை பார்த்து வாருங்கள் என்றனர்.

பின்பு நாங்கள் அனைவரும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்கு தொடுத்தோம் அதில் எங்களுக்கு **நான்கு வாரத்துக்குள் பணி ஆணை வழங்குமாறு மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 18.10.2022 அன்று உத்தரவிட்டிருந்தது.** அதற்கு பின்பு **ஐந்து** மாதங்கள் ஆகியும் இன்னும் இதற்கான எந்த முடிவும் TRB தரப்பிலிருந்து தெரிவிக்கப்படவில்லை. 20% தமிழ் வழி இட ஒதுக்கீடு முழுமையாக நிரப்பப்படவில்லை.

பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் எங்களுக்கு இந்த நிகழ்வானது மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தி இருக்கிறது.

இப்படிக்கு

**பாதிக்கப்பட்ட நபர்கள்**